விலை சதம் -/25

# காந்தீயம்

**ஆத்மிகசாதனை**

நம் ஆத்மீக சாதனையை நம் வீட்டிலே சோதித்துப் பார்க்க முடியாது. சமூக சேவைக்களத்திலேதான் சோதித்துப் பார்க்கமுடியும்.

— விநோபா

PERIODICALS DIVISION

மலர் 16 | காந்திநிலையம் - உருத்திரபுரம் (காந்தி ஆண்டு 109) 1979 யூலை, ஓகஸ்ட், செப்ரெம்பர் | இதழ் 10-11-12

# பிறர் பணியில் பிரம்மத்தைக் கண்டேன்


## பிறந்தநாள் பற்றி வினோபாஜி

இப்பொழுதெல்லாம் என் பிறந்த நாளை மக்கள் எனக்கு வலியுறுத்தத் தவறுவதில்லை. சிறு வயதில் என் தாய் நினைவுறுத்திக் கொண்டிருந்தார். இடையில் மக்கள் என் மீது அன்பு மாரி பொழியத் தொடங்கிய காலத்தில், இந்த நாளை நினைவுபடுத்தி தம்பேரன்பினாலாயினும் எனக்குத் தொல்லை கொடுப்பதற்கு என் தாய் இல்லை — மறைந்துவிட்டார். ஆனால் நான் இந்த நாளை வேறொரு காரணத்தினால் நினைவில் வைத்துக் கொண்டு வந்திருக்கிறேன். புதிய காரியம் தொடங்குவது, பழைய ஆசைகளைத் துறப்பது, புதிய நட்புறவுகள் அமைத்துக் கொள்வது ஆகியவற்றை நான் ஆண்டு தோறும் இந்த நாளில் செய்வது என்று வைத்துக் கொண்டிருக்கிறேன்.

### நாள்தோறும் நற்செயல்

ஒவ்வொரு நாளும் இன்று நான் என்ன புண்ணியம் செய்தேனென்று யோசித்தல் வேண்டுமென்பது சாஸ்திரங்களின் கட்டளை. ஒவ்வொரு நாளும் நம் ஆயுளின் ஒரு பகுதி மறைந்து கொண்டே — கழிந்து கொண்டே வருகிறது. தினமும் சூரியன் நம் ஆயுளின் ஒரு துணுக்கைப் பறித்துக் கொண்டே இருக்கிறான். எனவே இந்த நேரத்தில் நாம் செய்த நல்ல காரியம் என்ன என்பதை நாம் நாள்தோறும் எண்ணிப் பார்த்தல் மிகவும் அவசியம். ஆகவே தான் ஒவ்வொரு நாளும் சந்தி வழிபாடு செய்யவேண்டும் என்று கூறப்படுகிறது.

*வாழ்க பல்லாண்டு!*



அருளொழுகும் இரு கண்கள்
அறம் ஊறும் நன்னெஞ்சம்
இரு தோள்கள் மீதினிலே
எழில் கருமம் தானுறங்கும்
பொருளறியா மக்களுக்குப்
பொருள் கூறி பூமிதனில்
இருளகற்ற வந்துதித்த
இணையில்லாப் புரட்சி முனி!

*செப்ரெம்பர் 11 ஆம் திகதி*
*வினோபாஜி*
*85 ஆவது பிறந்த நாள்*

சந்திக் காலம் என்பது இரண்டு. சூரியன் மாலையில் மறைவது ஒன்று; காலையில் உதிப்பது மற்றொன்று. இவையிரண்டும் இறைவனை நினைந்து வழிபடுவதற்குரிய காலங்கள். 'சந்தியை' என்ற சொல் கருத்தாழம் நிறைந்த அருமையான சொல். சிறந்த முறையில் தியானித்தல் என்று இதற்குப் பொருள் கொள்ளலாம். இரு வேளைகளில் வழிபடுதல் என்றால் எதை வழிபடுவது? காலை மாலை வேளைகளில் கிழக்கிலும் மேற்கிலும் தொடுவானத்தில் வண்ண விசித்திரங்கள் வெடித்துப் பரவுகின்றனவே; அவைகளையா? அல்ல. அவை காட்சி இன்பம் அளிக்கும் அற்புதத் தோற்றங்கள்; அவ்வளவே. ஆனால் நாம் செய்ய வேண்டுவது அந்த நேரத்தில் அங்கிங்கெனாதபடி எங்கும் விளங்கும் இறைவனை எண்ணி, நாம் ஆற்றிய பணிகள் பற்றியும் ஆற்றவிருக்கும் செயல்கள் குறித்தும் சிந்தித்தல் வேண்டும்.

### பிறந்த நாளின் பொருள்

இதே போலப் பௌர்ணமி, அமாவாசை ஆகிய நாட்களும் கடவுள் தியானத்திற்குரிய நன்னாட்களே. ஆனால் நகரங்களில் வாழ்பவர்களுக்கு மின்சார ஒளி காரணமாக ஒவ்வொரு இரவும் பௌர்ணமியாகவே காட்சியளிக்கின்றதாதலால் அது வருவதும் போவதும் புரியாததாகவே போய்விடுகிறது. பதினைந்து நாட்களுக் கொரு முறை வரும்

(2ஆம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காந்தீயம்

காந்தி நிலையம்

உருத்திரபுரம். [இலங்கை]

தொலைபேசி: 254

(கிளிநொச்சி)

காந்தி ஆண்டு 109

1979 யூலை, ஓகஸ்ட், செப்ரெம்பர்


## பாவையும் - பாரதியும்

ஊருக்குழைத்திடல் யோகம் — நலம்
ஓங்கிடுமாறு வருந்துதல் யாகம்
போருக்கு நின்றிடும்போதும் — உளம்
பொங்கலில்லாத அமைதி மெய்ஞ் ஞானம்

என்று பாடினான் புரட்சிக்கவி பாரதி.

வினோபாஜியின் வாழ்க்கை வரலாறே இப்பாட்டில் அடங்கிப் போய் விடுகிறது. 85 ஆவது பிறந்தநாள் கொண்டாடும் வினோபாஜியின் வாழ்க்கை ஒரு பக்திக் காவியம். வாழ்க்கையின் தொடக்கம்தொட்டு இன்றுவரை வினோபாஜியின் வரலாற்றில் மக்கள் தொண்டின்மூலம் பிரம்மத்தை அறியும் முயற்சி மேலோங்கி இருப்பதைக் காணலாம்.

வினோபாஜி ஒரு தீர்க்கதரிசி. அவரைப்போன்றே பாரதியாரும் ஒரு தீர்க்கதரிசி. வையத்துள் வாழ்வாங்கு வாழ பாரதி வகுத்துக் கொடுத்த இலக்கணத்திற்கேற்ப வினோபாஜியின் வாழ்க்கை அமைந்துள்ளது. வினோபாஜியைப்பற்றி நினைக்கும்போது பண்டைய முனிவர்களும் மகான்களும்தான் நம் கண்முன் வருகின்றனர். எல்லாவிதமான ஸ்தூல செயல்களிலிருந்தும் தம்மை விடுவித்துக்கொண்டு 'கர்ம முக்தி' யோகத்தின் மூலம் மெய்ஞ் ஞானப்பாதையில் இன்று வினோபா பிரம்மத்தை நோக்கி முன்னேறிக் கொண்டிருக்கிறார். வினோபா அடிகள் நம்மைக் கடைத்தேற்ற முயலும் இந்த மகாத்மா (வினோபா அடிகள்) இன்று நம்மிடையே இருப்பது இத்தலைமுறையின் அதிஷ்டம்தான். மேலும் பல்லாண்டுகள் வாழ்ந்து மக்களுக்கு வழி காட்டவேண்டுமென்பதே வினோபாஜியின் பிறந்தநாளில் நமது பிரார்த்தனை.

## பிறர் பணியில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவற்றிற்குப் 'பருவங்கள்' என்று பெயர். பருவமென்றால் தங்குமிடம், முகாம் என்று பொருள். தங்குமிடமாய் அமைந்த அந்த நாட்களை நாம் சிந்திப்பதற்கென வருவதாகக் கொள்ள வேண்டும். இதே வகையில்தான் பண்டிகை நாட்களையும் பயன்படுத்த வேண்டும். அதுவரை நாம் என்னென்ன செய்தோம் என்பதை யோசித்துக் கணக்குப் பார்ப்பதற்காக வருபவையே அவை. இந்தப் பிறந்த நாளும் இதே வகையைச் சேர்ந்தது தான்.

### பிறப்பினாலும் ....., இறப்பினாலும் .....?

நாம் பிறந்ததில் நம் தாய்மார்களுக்கு ஏதோ விசேஷமாகத் தோன்றியிருக்கலாமெனினும் பொதுவாக இந்த சிருஷ்டியைப் பற்றிய வரையில், ஒருவரது பிறப்பினாலோ இன்னொருவரது சாவினாலோ இலாபமோ நஷ்டமோ எதுவும் ஏற்படுவதாகச் சொல்வதற்கில்லை. எனவே நான் என்னைத் தனியாகக் கொண்டு என் வாழ்க்கையைப் பற்றி மட்டும் எண்ணாது, நானும் சேர்ந்து அமைந்துள்ள இந்தச் சமுதாயம் பற்றியே சிந்திக்கும்போது நான் காண்பதே முற்றிலும் வேறான காட்சியாக உள்ளது.

### பிரம்ம வித்தை நிலவ வேண்டும்

பாரதத்திலும் உலகெங்கும் பிரம்ம வித்தை நிலவவேண்டும். இல்லையேல் ஆபத்து நிச்சயமாக வரும் என்றே எனக்குத் தோன்றுகிறது. விஞ்ஞானத்தினால் நன்மை விளையும் என்பதை நான் மறுக்கவில்லை. ஆனால் அதைப் பயன்படுத்துகின்ற முறையில்தான் அது நன்மை பயக்குமா அன்றித் தீமை விளைவிக்குமா என்று கூறமுடியும். எனவே விஞ்ஞானத்தை வளர்ப்பதற்கு முயற்சிசெய்யும் பொழுதே அதை நல்லகாரியத்திற்குப் பயன் படுத்துவதற்கான ஏற்பாடும் செய்யப்பட வேண்டும். இதற்கு பிரம்மவித்தை ஒன்றுதான் உதவும் என்பது என் திடமான நம்பிக்கை. எனவே பிரம்மத்தைத் தேடிக்கொண்டு வீட்டை விட்டு வெளியேறிய காலத்தில் நான் இருந்த நிலைவேறு. இப்பொழுது என் சிந்தனை முழுவதும் சமுதாயரீதியாகவே நடைபெறுகிறது. மேலும் அப்பழைய குறிக்கோளும் பிரம்மத்தைக்காண வேண்டுமென்ற வேட்கையும் ஓரளவுக்குத் திருப்தியாகிவிட்டது என்றே சொல்ல வேண்டும்.

கடையனும் கடைத்தேற வழிவகை செய்வோமானால் அதுவே இறைவனுக்குச் செய்யும் திருத்தொண்டாக அமையும்.

## அன்பர் தபால்

காந்தீயம் மலர் 16 கிடைக்கப் பெற்றோம்; நன்றி. இவ்விதழின் நாலாம் பக்கத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ள ''இலங்கைக்கு ஒரு காந்தி தேவை'' என்னும் தமிழ் நாடு பேராசிரியர் மா. பா. குருசாமியின் கண்ணோட்டம் கண்டு மிக மகிழ்ந்தோம். இவரின் கருத்தை அனைவரும் தெய்வவாக்காக மதித்துச் செயல் படவேண்டும். இவ்வாறான பெரியார்களின் கருத்துக்களை அள்ளித்தீட்டி உலகின் அறியாமையை அகற்றப் பிரயத்தனப்படும் 'காந்தீயம்' பத்திரிகையின் பணியைப் பாராட்டுகின்றோம்.

'மில்க் வைற்' க. கனகராசா
யாழ்ப்பாணம். அதிபர்

## புதிய பத்திரிகை

### நூலகன்

*இலவச வெளியீடு*

புதிதாக வெளியிடப்படும் நூல்களை இலவசமாக விளம்பரம் செய்யும் நோக்கோடு வெளியிடப்படும் இதழ் இது.

ஆசிரிய தலையங்கத்தில் ''எத்தனையோ சிரமங்களுக்கு மத்தியில் ஒரு நூலை அச்சிட்டுவிட்டு, அதனை விற்க முடியாது திண்டாடும் எழுத்தாள நண்பர்களின் ஆக்கங்களை இலவசமாக அறிமுகம் செய்து வைக்கும் புதிய முயற்சி'' எனக் குறிப்பிடப்பட்ட இம்முயற்சி தொடர்ந்து வளரட்டும்!

*முகவரி*: நூலகன், 86, ஓல்ட் ரோட், காத்தான்குடி - 2.

★ சர்வோதய நற் சமுதாயத்தினை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வையம் வாழ்க

• வினோபா அடிகளைப் பற்றி தமிழ்நாடு — காந்தி நிகேதனத்தின் செயலாளர் திரு.கா. முனியாண்டி கூறுகிறார்.

'வினோபா' — உலகம் முழுவதும் தெரிந்த பெயர். உலகம் உள்ளளவும் நிலைத்து நிற்கும் நாமம். இவருக்கு மட்டும் ஏனிந்த நிலை? இவருக்குரிய விசேஷத் தன்மைகள் எவை? சற்று ஆராய்வோம்.

## உலக சர்வோதயம்

'ஜெய் ஹிந்' என்று உரத்த குரலில் கோஷமிடும் நம் நாட்டில் 'ஜெய் ஜகத்' என்று முதன் முதலில் கூறியவர் வினோபா. வையம் வாழ்க என்றல்லவா இது பொருள் படுகிறது. அதாவது தேசம் என்பது ஒரு சிறிய எல்லை. உலகமோ பரந்தது. விசாலமான பரப்பில் வாழ்பவர் அனைவரும் நலமெய்தினால் இந்தியாவில் உறைபவரும் நலமடைவார்கள். இதை அறிவுறுத்தவே வினோபா இக்கோஷத்தை உருவாக்கினார். சர்வோதயம் இவ்வாறு உலகத்தை ஆட்கொள்ளுகிறது.

## உத்தம சீடர்

வினோபா காந்தியடிகளின் சீடர். அவரது ஆன்மீக சீடரும் கூட. குருவினுடைய உள்ளக் கிடக்கையை உள்ளது உள்ளவாறு உணர்ந்த ஒரு மகான். பிரம்மத்தைக் காண விழைந்த இளைஞன் வினோபா இமய மலைக்குப் புறப்படுகிறான். வழியில் காசி நகர் குறுக்கிடுகிறது. அங்கு ஒரு செய்தித் தாளில் சுதேச மன்னர்கட்கு காந்தியடிகள் ஆற்றிய சொற்பொழிவைப் படித்துப் பார்க்கிறான். தான் தேடி அலையும் மாமனிதர் இவரே என்பதை உணர்கிறான். ஆகவே சபர்மதி ஆசிரமத்திற்கு நேரே சென்று தன்னை ஓர் ஆசிரம வாசியாக்கிக் கொள்கிறான். இது 1916 ஆம் ஆண்டில் நடைபெற்ற நிகழ்ச்சி. அது உலக சரித்திரத்தில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய ஆண்டு, ஏனெனில் காந்திய நெறிக்கு ஒரு விளக்க கர்த்தா அன்றே உருவாகிவிட்டார். வன்முறையில் ஓடும் உலகிற்கு நன்முறையை வழங்குவதற்கு அன்று சபர்மதியில் வித்திடப்பெற்றது.

## பன்மொழிப் புலவர்

அடக்கம் நிறைந்த ஆண் மகன் வினோபா. உண்மையைக் கூறுமிடத்து அவர் ஒரு நிறை குடம். 18 மொழிகள் கற்றுத் தேர்ந்தவர். புலமை பெற்றவரானதால் தனது பேச்சு, எழுத்து நடைகளில் எளிமை கண்டவர். அவரிடத்தில் தெளிவு பிறந்ததால் எளிதில் புரிய வைக்கிறார். இந்த சித்தத் தெளிவில் உதித்ததே 'ஜெய் ஜகத்'.

## நைட்டிக பிரம்மச்சாரி

வினோபா வீட்டிற்கு மூத்த பிள்ளை. அவருக்கு இரண்டு தம்பிகளும் ஒரு தங்கையும் உண்டு. தங்கை விவாகம் செய்து கொண்டாள். ஆனால் சீக்கிரமே உயிர் நீத்தாள். அவருடைய தந்தை சிறந்த விவேகி. தாயார் பண்பாடு மிக்க பகுத்தறிவு வாதி. கடவுள் பக்தியில் திளைத்தவள். வினோபாவை உருவாக்கிய பெருமை அவருடையதே. பிஞ்சுள்ளத்தில் பிரமச்சரிய விதையை ஊன்றியவள் அப்பெருமாட்டி. 'திருமணஞ் செய்தால் ஒரு தலைமுறையைக் காப்பாற்றலாம்; மணம் புரியாவிட்டாலோ 48 தலைமுறைகள் காப்பாற்றப் பெறும்' என்ற அவளது வாக்கு பத்து வயதுப் பாலகனை உலுக்கிற்று. அவன் நைட்டிகப் பிரமச்சாரியானான். அதனால் உலகம் பெருமையுற்றது.

## நுண்ணறிவாளர்

பரோடாவில் பயின்ற காலத்தே கல்லூரி நூலகத்தை ஒரு கை பார்த்தவர் வினோபா. வேதங்கள், உபநிடதங்கள் ஆகியவற்றைக் கரைத்துக் குடித்தவர். வெறும் நூலறிவினால் மட்டும் தன்னை உயர்த்தாமல் சிந்தனைச் சீலத்தையும் பெற்றவர் அவர். 1956 ஆம் ஆண்டில் டிசம்பர் 24 ஆம் நாள் காந்தி நிகேதன் ஆசிரமத்திற்குத் தனது பாத யாத்திரையின் போது வருகை தந்தார். ஆதாரப் பள்ளியில் ஒரு கண்காட்சி ஏற்பாடாகியிருந்தது. பள்ளிச் சின்னத்தை உற்று நோக்கிய அவர் குத்து விளக்கின் ஐந்து திரிகளில் சுவை, ஒளி, ஊறு, ஓசை, மணம் என்று எழுதியிருந்ததைக் கண்ணுற்றார். உடனே என்னிடம் "நாற்றம் என்றல்லவா வள்ளுவர் மொழிந்திருக்கிறார். நீங்கள் மணம் என்று மாற்றியுள்ளீர்களே?" என்று விநயமாய்க் கேட்டார். இன்றைய சொல்வழக்கில் நாற்றம் நறுமணத்தை மட்டும் குறிப்பிடவில்லை என்றதும் உடனே புரிந்து கொண்டு தலையசைத்தார் வினோபா. அத்தகைய நுண்ணறிவு மிக்கவர் நமது காந்திய நன்கொடை. எனவேதான் அவருடைய சொற்பொழிவுகள் கற்றோரையும் மற்றோரையும் கவர்ந்துவிடுகின்றன. இவ்வாறு உலகிற்கு ஞானதானம் அளித்து வருபவர் வினோபா. அவர் நீடுழி வாழ்க! அமைதியும் ஆக்கமும் எங்கும் சூழ்க!

## வினோபா விடை

**வினா:** பக்திக்கும், பணிக்கும் வித்தியாசம் என்ன?

**வினோபா:** பணி கைகளால் செய்யப்படுவது. பக்தி உள்ளத்தில் ஏற்படுகிறது.

**வினா:** இயற்கையின் வனப்பைக் கண்டு மகிழ்ச்சி ஏற்படக் காரணம் என்ன?

**வினோபா:** இயற்கையில் ஆண்டவன் தென்படுகிறான். அதனால் தான் அதைக் கண்டதும் மகிழ்ச்சி ஏற்படுகிறது.

**வினா:** பாபத்திற்கும் புண்ணியத்திற்கும் வித்தியாசம் என்ன?

**வினோபா:** பாபத்தால் உள்ளத்தில் அமைதியின்மை ஏற்படுகிறது. புண்ணியத்தால் அமைதி கிட்டுகிறது.

**வினா:** உலகம் உய்ய மனிதன் பணி செய்கிறான். வானுலகம் உய்ய பக்தி செய்கின். ஆனால் ஞானத்தை, அறிவை மனிதன் எதற்காக வேண்டுகிறான்?

**வினோபா:** பணி, பக்தி, ஞானம் இம் மூன்றையும் தன்னைச் சீர்திருத்திக் கொள்ளவும், மக்களைச் சீர்திருத்தவும், பரலோகத்தில் நற்கதி கிடைக்கவுமே பயன்படுத்திக் கொள்கிறான்.

## நிர்மாணம் செய நித்தமும் உழைப்போம் ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்நாட்டில் காந்திய நிறுவனங்கள்

## காந்திசேவா சங்கத் தலைவர்

## திரு. இ. கந்தையா நேரில் கண்டவை

புதிய இந்தியாவை உருவாக்கக் காந்தியடிகள் நிர்மாணத் திட்டங்களை வெளியிட்ட பொழுது, அவற்றைச் செயல்படுத்த சில நிறுவனங்கள் தேவை என்பதையும் உணர்ந்தார். அந்தப் பெரியாருடைய பரிசோதனைச் சாலையாக விளங்கிய சபர்மதி ஆச்சிரமம் அண்ணலின் அடிச்சுவட்டைப் பின்பற்றிய பெரியார்கள் பலருக்கு வழிகாட்டியாக விளங்கியது. இந்தியாவின் பல பாகங்களிலும் சிறந்த தேசத் தொண்டர்களால் நிர்மாணப் பணிகளை மேற்கொள்ளும் நோக்கத்தில் காந்தீய நிறுவனங்கள் தோன்றின. தமிழகத்திலும் தன்னலமற்ற பல தொண்டர்கள் சமுதாயப் பணியிலீடுபட்டுத் தவமியற்றிக் காந்தீய நிர்மாணத் திட்டத்திற்குதவ முன்வந்தனர். கதர், கிராமக் கைத்தொழில்களின் வளர்ச்சி, ஹரிஜன முன்னேற்றம், தீண்டாமை ஒழிப்பு, ஆதாரக் கல்வி போன்ற சிறந்த பல அம்சங்களில் ஒன்றையோ, சிலவற்றையோ இந்த நிறுவனங்கள் தமது பணிகளாக ஏற்றுச் சிறப்படைந்தன என்பது இன்று சரித்திரமாகும். தென்னாட்டுக் காந்தி எனப் போற்றப்பட்ட ராஜாஜீ திருச்செங்கோட்டிலும் திரு. கோ. வெங்கடாஜலபதி அவர்கள் காந்தீயப் பொருளாதார நிபுணர் டாக்டர் ஜே. சி. குமரப்பாவின் தலைமையில் பல பெரியோர்கள் உதவியுடன் காந்தி நிகேதனை கல்லுப்பட்டியிலும் டாக்டர் சௌந்தரம் இராமச்சந்திரனும் டாக்டர் ஜீ. இராமச்சந்திரனும் திண்டுக்கல்லுக்கு அண்மையில் காந்திக் கிராமத்தையும் இராமகிருஷ்ண மிஷன் தொண்டுகளுடன் காந்தீயத்தையும் இணைத்துப் பணி செய்யும் நோக்குடன் கோயம்புத்தூரில் பெரிய நாயக்கன் பாளையத்தில் திரு. தி. சு. அவினாசிலிங்கம் அவர்கள் ஸ்ரீ இராமகிருஷ்ண வித்தியாலயத்தையும் இன்னும் அவ்வை ஆச்சிரமம், கிறீஸ்துகுல ஆச்சிரமம், காந்தி ஆச்சிரமம், தீனபந்து ஆச்சிரமம் எனப் பல நிறுவனங்களை நிறுவிக் காந்திஜீ கண்ட கனவுகளை நனவாக்க முயன்றதாகக் கேள்விப்பட்டுள்ளோம்.

இந்நிறுவனங்களையெல்லாம் பார்வையிடவேண்டுமென நீண்ட நாட்களாக ஆவல் கொண்டிருந்தோம். எமது ஆவலைப் பூர்த்தி செய்வதற்கு உதவுவது போல், தவத்திரு குன்றக்குடி அடிகளாரின் அழைப்பொன்று குன்றக்குடி அருள்தரு சண்முகநாதன் திருக்குடநன்னீராட்டு விழாவுக்குக் கிடைத்திருப்பதாகவும் நாம் போய் ஏரவிருப்பினால் தம்முடன் சேரும்படியும் காந்தி நிலைய நிர்வாகி அன்பர் திரு. சி. க. வேலாயுத பிள்ளை எழுதியிருந்தார். 1979 ஏப்ரில் 30 ஆம் திகதி நாங்கள் இலங்கையிலிருந்து புறப்பட்டு குன்றக்குடி போய்ச் சேர்ந்தோம். அருள்தரு சண்முகநாதப் பெருமானின் கும்பாபிஷேக விழா மிகவும் சிறப்பாக நடந்தது. தவத்திரு அடிகளாரின் ஆசி பெற்று, விழாச் சிறப்பு நிகழ்ச்சிகளையும் கண்டு ஆனந்தமாகக் கழித்து மதுரையை அடைந்தோம்.

கல்லுப்பட்டி காந்தி நிகேதனத்திற்கு 5. 5. 79 இல் சென்றோம். அங்கு ஏழ்மையே உருவான தவ முனிவர்களாக திருவாளர்கள் ரா. குருசாமியும் கா. முனியாண்டியும் விளங்கினார்கள். திரு. குருசாமி அவர்கள் வயோதிபங் காரணமாக ஆறுதலாக இருக்கிறார்கள். திரு. முனியாண்டி அவர்கள் அதிபராக இருந்து நிறுவனத்தை நடத்தி வருகிறார். தூய கதராடையுடனும் முகத்தில் தேஜசுடனும் எம்மை வரவேற்று உபசரித்த காட்சியை மறக்க முடியாது. நூல் நூற்றல், நெசவு வேலைகள், அரிசி குற்றுதல், தோல் வேலைகள், மண் வேலைகள், கடுதாசி வேலைகள் எல்லாம் அங்கு நடக்கின்றன.

மதுரையில் காந்தி மியூசியம் பார்த்தோம். 'ஆங்கிலேய தளபதி கிளைவ் தொடக்கம் தற்காலம் வரையுள்ள இந்தியாவின் சரித்திரங்கள், படங்கள், மற்றும் உபகரணங்கள் உதவியுடனும் வார்தா, சபர்மதி ஆச்சிரமப் பிரதிமைகளுடனும் தத்தரூபமாக விளங்கக் கண்டு மகிழ்ந்தோம். வாசிகசாலை நிறைய காந்தீய நூல்கள், பத்திரிகைகள் ஏராளமாக இருந்தன. மக்கள் அமைதியாக இருந்து படித்துக் கொண்டிருந்தனர். மகாத்மா காந்திஜீயை எதிர்காலத்திலும் மக்கள் மனதிற் பதிக்க நல்ல முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளமையை நினைத்துப் பெரிதும் மகிழ்ந்தோம்.

திண்டுக்கல்லில் உள்ள காந்திக் கிராமத்திற்குச் சென்றபோது அதிபர் திரு. பத்மநாபன் அவர்கள் அன்புடன் எங்களை வரவேற்றார். சேது நாராயணன் என்னும் அன்பர் எமக்கும் காந்திக் கிராமத்துக்கும் சேதுவாகப் பாலம் அமைத்தது மாத்திரமல்ல நாராயணனாகவும் எமக்குக்காத்தல் தொழிலையும் அன்று முழுவதும் இனிது செய்தார்.

காந்திக்கிராமத்தில் நாம் பலவிதமான பயிற்சி நெறிகளைப் பார்வையிட்டோம். சுமார் இருபது விதமான கைத் தொழில்களில் பயிற்சி அளிக்கப்படுகிறது. இக்கிராமம் படிப்படியாக 376 ஏக்கர்பரப்பளவைக் கொண்டதாக வளர்ந்துள்ளது, டாக்டர் சௌந்தரம் இராமச்சந்திரனும் டாக்டர் G. இராமச்சந்திரனும் பல காந்தீயப் பெரியார்களும் தங்கள் பொன்னான நேரத்தையும் சக்தியையும் பொருளையும் தியாகம் செய்து இந்த நிறுவனங்களை வளர்த்திருக்கிறார்கள் என்பதற்கு ஐயமில்லை.

காந்திக் கிராமக் குழந்தைகளில்லத்தில் 270 குழந்தைகள் வரை இருக்கிறார்கள். இதுவரை காலமும் 500 குழந்தைகள் வரை பயனுள்ளமனிதர்களாக வாழ்க்கையை அமைத்துக் கொண்டார்களாம். கைம்பெண்கள், ஆதரவற்ற மகளிர், கணவனால் கைவிடப்பட்டவர்களென 148 பேர் வரையுள்ளார்கள்.

கடந்த காலங்களில் 1122 மகளிர் வரை மறுவாழ்வளிக்கப்பட்டுள்ளனர். கஸ்தூரிபா மருத்துவமனையில் 6 டாக்டர்கள் வேலை செய்வதுடன் 160 படுக்கைகள் வரை உண்டு. எல்லாவித நோய்களுக்கும் சத்திர சிகிச்சைக்கும் வசதிகளுண்டு. பாலர் கல்வி வகுப்புகளில் 61 பேரும் ஆரம்பப்பள்ளியில் 620 பிள்ளைகளும் கல்வி பயில்கிறார்கள். அத்துடன் ஆசிரியர் பயிற்சிப்பள்ளியும் குடும்ப நல, குழந்தைகள் நல பயிற்சிப்பள்ளிகளும் உண்டு. இவ்வளவையும் கண்டு மகிழ எமது தமிழகப் பயணம் வாய்ப்பளித்தது. எல்லாம் ஆண்டவன் கிருபை.

இப்பத்திரிகை அகில இலங்கை காந்தி சேவா சங்கத்திற்காக உருத்திரபுரம் திரு. சி. க. வேலாயுதபிள்ளை அவர்களால் விவேகானந்தர் மேடு, கொழும்பு - 13 சங்கர் சன்ஸ் அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
இலங்கையில் புதினப்பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org